செ.வெ.எண்: 168 நாள்: 17.03.2025

# புதுக்கோட்டை மாவட்டம்

## பிரதம மந்திரி கௌரவ நிதி உதவி திட்டத்தில் தொடர்ந்து பயன்பெறுவதற்கு விவசாயிகள் நிலஉடைமைகளை சரிபார்த்துக் கொள்ள வேண்டும் – மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

---

புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் பிரதம மந்திரி கௌரவ நிதி உதவி திட்டத்தில் தொடர்ந்து பயன்பெறுவதற்கு விவசாயிகள் கிராம அளவில் நடைபெற்று வரும் நிலஉடைமைகளை சரிபார்த்துக்கொள்ளும் முகாமில் கலந்துகொண்டு பதிவு செய்திடலாம்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் அனைத்து வருவாய் கிராமங்களிலும் நிலஉடைமைகளை சரிபார்க்கும் பணி நடைபெற்று வருகிறது. விவசாயிகள் தங்கள் நில விவரங்களை தங்கள் கிராமங்களில் நடத்தப்படும் சிறப்பு முகாம்களில் கலந்துகொண்டு மார்ச் 31ஆம் தேதிக்குள் பதிவேற்றம் செய்திட அறிவுறுத்தப்படுகிறார்கள். மேலும், கூடுதலாக விவசாயிகள் தங்களுக்கு அருகாமையில் உள்ள பொது இ–சேவை மையங்களிலும் கட்டணமின்றி பதிவு செய்யும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதனை விவசாயிகள் முழுமையாக பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் 83,265 தகுதியுள்ள பயனாளிகளுக்கு பிரதம மந்திரியின் கௌரவ நிதி உதவி திட்டத்தில் தற்பொழுது நான்கு மாத்திற்கு ரூ.2000 வீதம் வருடத்திற்கு மூன்று தவணைகளாக ஆண்டிற்கு மொத்தம் ரூ.6000 வழங்கப்பட்டு வருகிறது. தற்சமயம் மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட தகவலின்படி மார்ச் 2025க்குபின் பிரதம மந்திரியின் கௌரவ நிதி உதவி திட்டத்தில் வழங்கப்படும் தவணைத்தொகையினை தொடர்ந்து பெறுவதற்கு வேளாண் அடுக்ககம் திட்டத்தில் தங்களுடைய நிலஉடைமை விவரங்களை சரிபார்த்து பதிவு செய்வது கட்டாயம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் அரசின் பல்வேறு திட்டப்பலன்களைப் பெறுவதற்கு தங்களது நில உடைமை விவரங்கள், பயிர் சாகுபடி அறிக்கை போன்ற தொடர்புடைய ஆவணங்களை ஒவ்வொருமுறையும் சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. இதில் ஏற்படும் காலதாமதத்தினை தவிர்க்கும் வகையிலும் அரசின் திட்டங்களில் விவசாயிகள் குறித்த நேரத்தில் பயன்பெற ஏதுவாகவும் அனைத்து விவரங்களையும் மின்னணுமுறையில் சேகரித்திட தமிழ்நாட்டில் வேளாண் அடுக்குத் திட்டம் (AgriStack) செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

தற்போது, விவசாயிகளின் பதிவு விவரங்களுடன் ஆதார் எண், கைபேசி எண், நில உடைமை விவரங்களையும் விடுபாடின்றி இணைக்கும் பணி சம்பந்தப்பட்ட வருவாய் கிராமத்தில் நடைபெற்று வருகிறது. மேலும் விவசாயிகள் பொது சேவை மையம் (CSCs) சென்று அங்கும் நில உடைமை விவரங்கள் இணைக்கப்பட்ட பின்னர் அனைத்து விவரங்களும் ஒருங்கிணைக்கப்பட்ட ஆதார் எண் போன்ற

தனித்துவமான தேசிய அளவிலான அடையாள எண் ஒவ்வொரு விவசாயிக்கும் ஏற்படுத்தப்படும். 2025-26ஆம் நிதி ஆண்டு முதல் பிரதம மந்திரி கவுரவ நிதித் திட்டம் (PMKISAN) பயிர்காப்பீட்டுத் திட்டம் (PMFBY) போன்ற ஒன்றிய மற்றும் மாநில அரசின் திட்டங்களில் விவசாயிகள் எளிதில் பயன்பெற தேசிய அளவிலான தனித்துவ அடையாள எண் வழங்கப்படுகிறது.

எனவே, விவசாயிகள் தங்களது கிராமங்களில் வேளாண்மை உழவர் நலத்துறை அலுவலர்களால் நடத்தப்படும் சிறப்பு முகாம்கள், அருகில் உள்ள பொது இ-சேவை மையங்களுக்கு நேரடியாக சென்று தங்கள் நில உடைமை விவரங்கள், ஆதார், கைபேசி எண் ஆகிய விவரங்களை அளித்து எவ்வித கட்டணமுமின்றி 31.03.2025ஆம் தேதிக்குள் இத்திட்டத்தில் பதிவு செய்து பிரதம மந்திரியின் கௌரவ நிதி உதவி திட்டத்தில் தொடர்ந்து தவணைத்தொகைகளை பெற்று பயன்பெறலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

-----------------------------------------------------------

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**

புதுக்கோட்டை மாவட்ட செய்திகளை உடனுக்குடன் தெரிந்துக்கொள்ள:

Pro Pudukkottai PRO PDKT @PRO_Pudukkottai Pro.Pudukkottai